கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.334/2002** தேதி: **09.01.2026**

பிரதிவாதி தரப்பு சாட்சி -3 (ஆதிசக்தி சிவபன்னீர்செல்வம் ராஜா, த/பெ.ஆதிசக்திசிவசண்முக ராஜா) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அசல் வழக்கு எண் 334/2002 ல் வழக்கு அ அட்டவணை சொத்தில் 3 அயிட்டங்கள் என்றால் சரிதான். அதில் A அட்டவணை சொத்தினை பொருத்தவரையில் விளம்புகை பரிகாரமும், B அட்டவணை சொத்தினை பொருத்தமட்டில் அதில் இருக்கும் கட்டிடத்தினை இடித்து அதனை ஒப்படைக்கும் மாறு பரிகாரம் கோரப்பட்டது என்றாலும் சரிதான்.
2. B அட்டவணை சொத்தானது A அட்டவணை சொத்தின் முதல் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி என்றால் சரிதான். தாசில்தார் மற்றும் மாவட்ட ஆட்சியர் எதிராக முதல் பிரதிவாதி கோயிலுக்கு பட்டா வழங்கக்கூடாது என்று அவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்தில் என்ன உள்ளது என்றால் ஆதிசக்தி சிவபாலசுப்ரமணிய கோயில் (முதல் பிரதிவாதி) உள்ளது. அந்த கோயில் எப்போது கட்டப்பட்டது என்றால் 1925 ல் இருக்கும் என்று நினைக்கிறேன்.
3. 100 ஆண்டுகளாக அங்கு கோயில் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கோயிலின் பரம்பரை தர்மக்கர்த்தா என்ற உரிமையை இந்து சமயஅறநிலையப்த்துறையின் இணை ஆணையரிடம் யார் உத்தரவு பெற்றது

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.09 17:28:27 +0530

என்றால் எனது அப்பா 1 ஆம் பிரதிவாதி பெற்றார். அந்த உத்தரவினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதில் எந்தெந்த சொத்துக்கள் முதல் பிரதிவாதி கோயிலுக்கு பாத்தியம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4. எனது அப்பா ஏற்கனவே அசல் வழக்கு எண் 775/1991 என்ற வழக்கினை கடலூர் உரிமையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தான் எனது அப்பா B அட்டவணை சொத்தில் ஒரு பகுதியில் சிறிய அளவில் ஒரு கொட்டகை போட்டு இருந்தார் என்றால் சரியல்ல. எனது தாத்தா காலத்தில் இருந்து உள்ளது.

5. அவ்வாறு கொட்டகை போடப்பட்டதே அங்கு ஒரு கோயில் உள்ளது என்பதை காண்பிக்கத்தான் என்றாலும் அதற்கு முன்பாக அங்கு ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது அப்பா என்ன வேலை செய்து வந்தார் என்றால் செயின் மேரிஸ் மிடில் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார். மாணிக்கவேல் என்பவர் யார் என்றால் எனது சித்தப்பா ஆவார். எனது தகப்பனாரின் உடன் பிறந்த தம்பி ஆவார். அவர் தற்போது உயிருடன் இல்லை. எனது பாட்டி தனலட்சுமி அம்மாள் என்றாலும் அவர் தற்போது உயிருடன் இல்லை என்றாலும் சரிதான்.

6. எனது அப்பாவிற்கு முன்பாக எனது பாட்டியும் மாணிக்கவேலும் தான் கோயிலை பார்த்து வந்தனர் என்றால் சரியல்ல. எனது அப்பாவும் சேர்ந்து தான் பார்த்து வந்தார். எனது அப்பா கடலூரில் தான் நிரந்தரமாக குடியிருந்தார் என்றால் சரிதான். பாட்டியும் சித்தப்பாவும் இருந்த வரை கோயில் நிர்வாகத்தில் எனது

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.01.09 17:28:31
+0530

அப்பா எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருவிழா காலத்தில் எனது அப்பாவும் சேர்ந்து தான் வேலை செய்வார். அனைத்து பத்திரிக்கைகளிலும் அவர் பெயரும் இருக்கும். கோயில் திருவிழா காலத்தில் பத்திரிக்கை அடிப்பது உண்டா என்றால் உண்டு. கோயில் பத்திரிக்கை இவ்வழக்கில் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

7. எனது அப்பா உயிருடன் இருந்த காலத்திலும் கூட எனக்கு பவர் அளிக்கப்பட்டு நான் தான் இந்த வழக்கில் பி.த.சா. 2 ஆக விசாரிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 775/1991 ல் எனது தகப்பனார் விசாரணைக்கு ஆஜராகமால் வழக்கானது 07.09.1993 ல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. அசல் வழக்கு எண் 775/1991 வழக்கு பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண் 120/1998 என்ற வழக்கை மீண்டும் வாதி கோயிலுக்கு எதிராக எனது தகப்பனார் நிலைகால உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார் என்றால் இல்லை. இந்த வழக்கிலும் வாதி கோயிலால் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டு 05.10.1999 ல் விசாரணைக்கு வந்தபோது அந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு மீண்டும் அதே வழக்கு மூலத்தில் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கேட்டு இடைமனு எண் 2615 /1999 என்ற மனுவினை தாக்கல் செய்தார் என்றாலும் அது 18.01.2000 ல் அனுமதிக்கப்பட்டது என்றாலும் எனக்கு

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.09 17:28:35 +0530

தெரியாது. அந்த மனு அனுமதித்ததன் பெயரில் எனது தகப்பானர் அசல் வழக்கு எண் 536/1999 என்ற வழக்கினை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே தாக்கல் செய்த இடைமனு எண் 2615/1999 என்ற மனுவில் அனுமதி அளிக்கும்போது செலவுத் தொகை அளிக்க உத்தரவிடப்பட்டது என்றாலும் அதனை கொடுக்காமல் அசல் வழக்கு எண் 536/1999 தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது.

9. செலவு தொகை செலுத்தப்படாததால் அவ்வழக்கினை ரத்து செய்ய கோரி இடை மனு எண் 356/2001 தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. **என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகலானது இடை மனு எண் 356/2001 முதல் ஏற்பு வழக்குஎண் 536/1999-ல் 24.06.2002 தேதியில் பகரப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். இது வா.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.த.சா.ஆ.15-ல் படி அசல் வழக்கு எண் 536/1999 ஆனது ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

10. ஏற்கனவே AS.No.225/1989 என்ற மேல்முறையீட்டு வழக்கில் மாவட்ட நீதிமன்றத்தால் வாதி கோயில் தாக்கல் செய்த எதிர் கோருரிமை அனுமதிக்கப்பட்டு சொத்து சுவாதீனம் கொடுப்பத்தில் இருந்து தப்பிப்பதற்காகவே எனது தகப்பனார் ஒவ்வொரு வழக்காக தாக்கல் செய்து விசாரணை சமயத்தில் தள்ளுபடிக்கு விட்டு வந்தார் என்றால் சரியல்ல.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.09 17:28:40 +0530

11.வழக்கு சொத்தினை பொருத்தவரையில் முதல் பிரதிவாதிக்கு எந்த வித உரிமையோ பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை பொருத்த வரையில் அசல் வழக்கு எண்.728/1991 என்ற வழக்கை கோயில் பெயருக்கு பட்டா கொடுக்க கேட்டு எனது தகப்பனார் ஒரு வழக்கை தாக்கல் செய்தாரா என்றால் செய்தார். அந்த வழக்கில் வாதி கோவில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேலும் அந்த வழக்கு 13.03.1993-ல் ஒருதலைபட்சமான தீர்ப்பானது என்றால் சரிதான். ஏற்கனவே நடந்த வழக்குகளை மறைத்து தான் எனது தகப்பனார் அவ்வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பு பெற்றார் என்றால் சரியல்ல.

12. OS.191/2003 வழக்கானது வழக்கு சொத்தில் உள்ள மரத்தின் மேல்மகசூலை யாரும் அனுபவிக்க ஏலம் விடக்கூடாது என்று அதை தடை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தென்னை மரமும், மாமரமும், புளிய மரமும் உள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள மேல்மகசூலை அவ்வழக்கிற்கு முன்புவரை வாதி கோவில் தான் ஏலம் விட்டு அனுபவித்து வந்தது என்றால் சரியல்ல.

13. முதன் முதலாக 23.03.2003-ல் தான் எனது தகப்பனார் ஏலம் விடுவது சம்பந்தமாக அறிவிப்பினை கிராமத்தில் பரப்பினார் மற்றும் கோவிலில் ஒட்டியிருந்ததார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.09 17:28:43 +0530

தினதந்தி நாளிதழில் 02.04.2003 அன்று 07.04.2003-ல் ஏலம் நடைபெறும் என விளம்பரம் கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் வாதி கோவிலால் ஏலம் விடப்பட்டு குணசேகரன் என்பவர் ஏலத்திற்கு எடுத்து அவர் அனுபவித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது தகப்பனாரோ நானோ மேல்மகசூல் அனுபவிப்பது சம்பந்தமாக ஏலம் விட்டேனா என்றால் இல்லை.

14.என்னிடம் காண்பிக்கப்படும ஆவணம் OS.42/1987 பிராதின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதில் தனலட்சுமி மற்றும் ஆதி சக்தி சிவ மாணிக்க வேல் ஆகிய இருவரும் வாதி கோவில் மற்றும் நடராஜன் இருவருக்கும் எதிராக தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். 20.01.1987-ல் நடந்த ஏலம் செல்லாது என தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதி கோவிலுக்கு தான் பாத்தியம் என்றாலும் அதில் எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வாதி கோவில் தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

வா.த.சா.ஆ.14 மற்றும் வா.த.சா.ஆ.15 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை முற்றிற்று. மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.01.09 17:28:47 +0530

பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.09 17:28:50 +0530

***Additional District Munsif ,***
***Cuddalore.***